# ஆருவது அரசியல் சட்டத்தை அரசு நீக்கினாலும் தமிழர் கூட்டணி பாராளுமன்றம் செல்லாது'

(சென்னை)

இலங்கை அரசாங்கம் ஆருவது அரசியல் சட்டத்தை ரத்துச் செய்தாலும், பாராளுமன்றத்துக்குச் செல்லும் நோக்கம் தமிழர் கூட்டணிக்குக் கிடையாது என அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவிக்கையில், "பாராளுமன்றம் கூட்டணிக்கு இப்போது தேவையில்லாதது; தமிழ் மக்கள் பாதுகாப்பாக வாழ வழிகாணுவதே இப்போது எம்முன்னுலுள்ள முதற் பிரச்சினை" என்று தெரிவித்சார். "கூட்டணி தெரிவித்த மாற்று யோசனைக்கு அரசாங்கம் இதுவரை தனது கருத்தைத் தெரிவிக்கவில்லை. ஆருவது அரசியல் சட்டத்தை நீக்குமாறு நாம் எவரிடமும் கேட்கவில்லை. ஆதலால் அதனைப்பற்றி நாம் அக்கறைப்படவில்லை" என்று தெரிவித்த திரு. அமிர்தலிங்கம், "இன்றைய சூழ்நிலையில் அதனை வைத் —6ம் பக்கம் பார்க்க

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 28-1-86 செவ்வாய் (தை 15 ஐ. அவ். 17) முழக்கம் 853

★ தலவாக்கொல்லை ஆலய உற்சவத்தையடுத்து

# மலையகத்தில் இன மோதல்!

# தமிழ் தொழிலாளர்கள் காயம்

## இ. தொ. கா. பிரமுகரும் ஆஸ்பத்திரியில்; கடை எரிப்பு; தோட்டங்களில் பகிஷ்கரிப்பு

(நுவரெலியா)

தலவாக்கொல்லையிலுள்ள இந்து ஆலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற உற்சவமொன்றையடுத்து அங்கு நின்ற பக்தர்கள் மீது இனம் தெரியாதவர்கள் மேற்கொண்ட தாக்குதலால் பெரும் தொகையான தோட்டத் தொழிலாளர்கள் காயமடைந்தனர். இதனையடுத்து நுவரெலியா, பிந்துல, தலவொக்கொல்ல பகுதிகளில் இன மோதல் ஆரம்பித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவங்களில் காயமடைந்தவர்களைப்பார்வையிடச் சென்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மாநிலப் பிரதிநிதியொருவர் ஆஸ்பத்திரியில் வைத்துத் தாக்கப்பட்டதால் அவரும் ஆஸபத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிங்களவருக்குச் சொந்தமான கடையொன்றும் இப்பகுதியில் முற்றாக எரிக்கப்பட்டது. இச் சம்பவங்களின் எதிரொலியாக மலையகத்தின் பல தோட்டங்களையும் சேர்ந்த தமிழ்தொழிலாளர்கள் நேற்று வேலைக்குச் செல்லாமல் பகிஷ்கரிப்பு நடத்தினர்.

இ. தொ. கா. பொதுச்செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி நேற்று ஜனாதிபதி ... 6 ம பக்கம் பார்க்க

## மூன்று முகமூடி மனிதரால் வவுனியாவில் கடும் பதற்றம்

(வவுனியா)

முகமூடி மனிதரின் நடமாட்டம் வவுனியா நகரை நேற்றைய தினம் கடும் பதற்றத்திற்கும் பெரும் பரபரப்பிற்கும் உள்ளாக்கியுள்ளது.

வவுனியா நகரின் சந்தைப் பகுதி, குடியிருப்புப் பகுதி என்பனவற்றின் மூலைமுடுக்கெல்லாம் ஓடித்திரிந்த வெள்ளை வாகனம் ஒன்றில் கண்கள் மட்டும் வெளித்தெரியும் மூன்று முகமூடி மர்மமனிதர்கள் சந்தேக நபர்களை இராணுவத்தினருக்கு அடையாளம் காட்டிய வண்ணமிருந்தனர்.

புகையிரத நிலைய வீதியிலமைந்த கடைகளிலிருந்தவர்களும் அழைத்துச் செல்லப்பட்டு சோதனையிடப்பட்டனர் பஸ் நிலையத்தில்நின்றபஸ்ஸிலிருந்த பயணிகளும் இறக்கப்பட்டு முகமூடி மனிதரால் அடையா ...6ஆம் பக்கம் பார்க்க

## ராணுவ சிப்பாய் கைது! கிளிநொச்சி சூத்திரதாரி

கிளிநொச்சி புகையிரத நிலைய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சூத்திரதாரியென்று அடையாளம் காணப்பட்ட சிப்பாய் ஒருவர் தலைமை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு கொழும்பு கொண்டுசெல்லப்பட்டார். இச்சம்பவத்தில் 10 தமிழர்கள் கொல்லப்பட்டதும், 16 பேர் காயமடைந்ததும் தெரிந்ததே.

## இரு துவக்குகள் அபகரிப்பு

(வவுனியா)

நேற்று முன தினம் காலை பத்தரை மணியளவில் வவுனியா புகையிரத நிலைய வீதியில் உள்ள மக்கள் வங்கியில் பாதுகாப்புச்சேவையில் ஈடுபட்டி ...6ஆம் பக்கம் பார்க்க

## யாழ். மாவட்ட கூட்டுறவு ஊழியர்கள் நாளை ஊர்வலம்

ஆயிரம் மீட்டர் பாதுகாப்பு வலயத்தை வாபஸ் பெறுமாறு கோரி யாழ் மாவட்டக் கூட்டுறவாளர், பணியாளர்களின் மாபெரும் கண்டன ஊர்வலமும், கடையடைப்பும் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களின் கூட்டத்திலே இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ...6ஆம் பக்கம் பார்க்க

## உடன் ரத்தாக கோரிக்கை!

## ஆசிரியர்களுக்கு சம்பளம் இல்லை

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் உள்ள பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு இம்மாதச் சம்பளத்திற்கான காசோலைகள் இதுவரை கிடைக்கவில்லை. ...6 ம் பக்கம் பார்க்க

## கேந்திரபகுதிகள் வலயப் பகுதியுள்; அதிபர்கள் கவலை

யாழ்ப்பாண நகரத்தின் கேந்திரப்பகுதிகள் பாதுகாப்பு வலயத்தினுள் அடக்கப்பட்டுள்ளதையிட்டு வடமாகாண அதிபர் சங்கம் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

இவ்வலயத்தினுள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, வைத்தீஸ்வரா வித்தியாலயம் போன்ற முக்கிய பாடசாலை —6ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் தொடரும் சீருடையினரின் தர்பார்

(கிளிநொச்சி)

சுமார் பத்து கவச வாகனங்களில் சென்ற இராணுவத்தினர் உருத்திரபுரம், ஏழாம் வாய்க்கால், ஜெயந்தி நகர், திருநகர் ஆகிய இடங்களில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். வாகனங்கள் மெதுவாக வீதியில்வர இராணுவத்தினர் இரு புறமாகவுள்ள காணிகளுக் கூடாக வந்தனர். இச் சம்பவத்தின்போது பலர் விசாரணை செய்யபபட்டும், ...6ம் பக்கம் பார்க்க

## யாழ். அரசாங்க செயலகம் நேற்றும் இயங்கவில்லை

பாதுகாப்புப்படை முகாம்களைச் சுற்றி ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய பாதுகாப்பு வலய சட்டத்தை அகற்றக் கோரி அன்னையர் முன்னணி மேற்கொண்டுவரும் போராட்டம் காரணமாக யாழ். அரசாங்க செயலகத்திலுள்ள அனைத்து அலுவலகங்களும் நேற்று நான்காவது நாளாக இயங்கவில்லை.

அன்னையர் முன்னணியின் ... 6ம் பக்கம் பார்க்க

## வடகிழக்கு சம்பவங்களை விபரிக்க

# ஜனாதிபதியைச் சந்திக்குமாறு டிக்ஷிற்றுக்கு டில்லி பணிப்பு

(புதுடில்லி)

இலங்கையில் சமீப நாட்களில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதும் இலங்கை அதிகாரிகளின் அறிக்கைகளும் பெரிதும் கவலை தருவதாக வுள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் புதுடில்லியில் நேற்று தெரிவிததார்.

இது தொடர்பாக ஜனாதிபதி ஜெயவர்த்தனவைச் சந்தித்துப் பேசுமுயற்சிக்குமாறு இலங்கையிலுள்ள இந்தியத் —6ஆம் பக்கம் பார்க்க

தமிழ் மக்கள் விரும்பிப் படிக்கும் பத்திரிகை ஈழமுரசு

### விற்பனைக்கு

ரோசா செடிகளுக்கான 'அதி விசேஷ உரம்' எங்களிடம். மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. M. G. M. Forage Stores, No. 208, 1 st Cross St., Jaffna. . P. 22611. R/16371

### விற்பனைக்கு

கருவாடுக்குத் தேவையான அரைத்த உப்புத்தூள் (50 கி. மூடை) விற்பனைக்குண்டு. M G M. Forage Stores. No. 208, 1st Cross St. and 781, K. K. S. Rd., Jaffna R/16370

## ராமகிருஷ்ண பேச்சு போட்டி

ராமகிருஷ்ணலயம், ஸ்ரீ ராமகிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு திருநெல்வேலியில் வசிக்கும் மாணவர்களுக்கிடையில் பேச்சுப் போட்டி ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பேச்சுப் போட்டிகள் மார்ச் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளது. போட்டிகளில் வெல்பவர்களுக்குரிய பரிசில்கள் பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண - சாரதா சேவாச்சிரமத் தலைவர் ஸ்ரீமத் சுவாமிகள் சித்ரூபானந்தா அவர்களால் வழங்கப்படும். போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர்கள், தங்களால் இயன்ற உதவிகளைச் செய்ய விரும்புவோர்கள் "ராமகிருஷ்ணலயம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

## வவுனியா பிரஜைகள் குழு

(வவுனியா)

வவுனியா பிரஜைகள் குழுவின் புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவாகியுள்ளனர்:

தலைவர் திரு. என். எம். எக்ஸ். சொர்ணபால, உப-தலைவர்கள் அல்ஹாஜ் பி.எப். அப்துல்லா, வண. பிதா. பி. ஜேசுராஜா, செயலாளர் திரு. வி. சுப்பிரமணியம், பொருளாளர் திரு. இ. அந்தோனிப்பிள்ளை, நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் திரு. வி. தம்பிராஜா, திரு. ஏ. எஸ். ஜோக்கிம், திரு. பி சந்தியாகோ (சமாதான நீதிபதி), வண. சகோதரர் இ. ஜே. இஸயா, நிர்வாகச் செயலாளர் திரு. எம். சுவாம்பிள்ளை-

# முழுமையான வெற்றி பெற தெய்வபலமும் மிக அவசியம்

(அரியாலை)

"மக்கள் பலம், ஆயுதபலம் மட்டும் முழு வெற்றியைத் தராது. அத்துடன் தெய்வ பலமும் இருக்க வேண்டும். இளம் பருவத்தினர் இதனை உணர மாட்டார்கள். வீர பாண்டியன் கட்டபொம்மன் போராளியாக இருந்தாலும், முருகப் பெருமானில் நம்பிக்கை வைத்தே தன் செயல்களைச் செய்து வந்தான். அவனை உயர்த்தியதற்கு வழிபாடுதான் காரணம். இளைஞர்கள் நல்வழியில் செயற்படும் சந்தர்ப்பம் இப்போது வந்துள்ளது. நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி என்ற கவிஞன் வரிகளை நோக்கவேண்டும். மனித பருவங்களில் இளம் பருவம் வேகமாகப் பாயும் நதி போன்றது. அதற்கு அஞ்சினுல் வேகமாகப் பாய்ந்து அழிவைத் தரும். வேகததைத் தடுக்க முடியாவிட்டாலும் போக்கை மாற்ற முடியும். இளைஞர்களின் உணர்ச்சியைக் கட்டுப்படுத்தித் தக்க வழியில் திருப்பி விட்டால் நல்ல பயனைத் தரும்."

இவ்வாறு இளைப்பாறிய அதிபரும், பண்டிதருமான ப. கணபதிப்பிள்ளை அரியாலை கலைமகள் அம்பாள் ஆலயத்தில் "இளைஞரும் சமயமும்" என்னும் பொருள் பற்றி உரையாற்றுகையில் குறிப்பிட்டார். அரியாலை அறிவொளிக் கலை இலக்கியக் கழகம் ஒழுங்கு செய்த இக் கூட்டம் திரு. ந. இராமநாதன் தலைமையில் நடைபெற்றது.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-'ஒவ்வொருவரும் தத்தம் கடமையை யாருடைய தலைமை என்ருலும் பலனை எதிர்பாராமல் செய்ய வேண்டும். பதவி ஆசை நீங்க வேண்டுமாளுல் சமய உணர்வு அவசியமாகும். சமய உணர்வு உள்ளவர்களுக்குப் போட்டி மனப்பான்மை வராது. அவ்வுணர்வு எங்களுக்கு வந்தால் நிச்சயம் வெற்றி வரும்.

எக்கருமத்திலும் நான் என்ற அகங்காரம் இல்லாது தன்னம்பிக்கை இருக்க வேண்டும். துணிவை வரவேற்க வேண்டும் ஆனுல்அது அகங்காரமாகமாறிவிட்டால் இழிவு படுத்திவிடும். எதையும் நாம் பலவந்தப் படுத்தக் கூடாது. பலவந்தப் படுத்திஞல் வாந்திவரும். எமக்குத் தொகையைவிட வகை தான் தேவை.

## சேவை

(அராலி)

அராலி வடக்குப்பகுதி எழுநூற்று எண்பத்தி நான்காம், எழுநூற்று எண்பத்தைந்தாம் இலக்க காரைநகர் யாழ்ப்பாணம் பஸ் பாதையில் உள்ளடங்குகின்றது .

ஆயினும் மேற்படி பகுதி சமூக நிறுவனங்கள் சிலவற்றின் வேண்டுகோளுக்கிணங்க அராலி ஊடான சித்தன்கேணி யாழ்ப்பாணம் தனியார் மினி பஸ் உரிமையாளர் சங்கம் தனது பஸ்கள் சிலவற்றை இப்பாதையில் சேவையிலீடுபடுத்தி வருகின்றது.

காரைநகர் யாழ்ப்பாணம் மினிபஸ் உரிமையாளர் சங்கம் இப்பாதை தனக்குரித்தான தெனக்கூறி தனது பஸ்களையும் சேவையிலீடுபடுத்தியுள்ளது.

## இணக்கசபை

(புலோலி)

தும்பளை கிழக்கு சனசமூக நிலையத்தினர் இணக்கசபை ஒன்றை அமைத்துள்ளனர். இதன் தலைவராக திரு. எஸ். எம். கந்தசாமியும், செயலாளராக திரு. கே. பாலசுந்தரமும்,பொருளாளராக திரு. இ. துரைராசாவும், கணக்குப் பரிசோதகராக திரு. த. பாலசுப்பிரமணியமும் தெரிவாகினர். 6 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## ராஜகோபுர கும்பாபிஷேகம்

பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள காரைநகர் கருங்காலி போசுட்டி அருள்மிகு ஸ்ரீ முருகமூர்த்தி கோவில் பஞ்சதன இராஜகோபுர மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9-15 வரையில் வரும் மீனலக்கின சுபமுகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது.

இந்த இராஜகோபுரம் மகாபலிபுர சிற்பக்கலை கல்லூரியில் பயிற்சிபெற்ற திரு. த. இரமணன் அவர்களாலும், அராலியூர் திரு. க. நவரத்தினம் அவர்களாலும் நிர்மாணிக்கப்பட்டது. சிற்ப வேலைகள் தஞ்சாவூர் திரு. பன்னீர்ச்செல்வன் அவர்களால் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இத்துடன் கடம்பத் தென்றலில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் வள்ளி தேவசேனு சமேத முருகப்பெருமானுக்கும், பரிவார மூர்த்திகட்கும் புதிதாக நிர்மாணிக்கப் பெற்ற சனீஸ்வரர், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகட்கும் மகா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

ஆரம்ப நிகழ்ச்சிகள் இம்மாதம் 27-ம்திகதி திங்கட்கிழமை அனுக்ஞை கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகின்றது. பிரதிஷ்டா வித்வஜோதி சிவஸ்ரீ இ. சுப்பிரமணிய குருக்கள் தலைமையில் பதின்மூன்று பிரதிஷ்டா குருமார்கள் உதவியுடன் கும்பாபிஷேகம் நடைபெறும். 45-ம் நாள் மண்டலாபிஷேக தினத்தன்று இராஜகோபுர சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படும்.

பல சமயப் பெரியார்கள், அடியார்கள் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.

## நேரில் விநியோகம்

(கிளிநொச்சி)

அகதிகளுக்கு உதவி புரியும் ஸ்தாபனங்களினுல் அன்பளிப்பு செய்யப்பட்ட அரிசி, பால்மா ஆகிய உணவுப் பொருட்களை கிளிநொச்சி பிரஜைகள் குழு ஸ்கந்தபுரம், கோணவில், அமைதிபுரம், குருகுலம் ஆகிய இடங்களில் இயங்கிவரும் அகதிகள் முகாம்களுக்கு நேரில் சென்று ஒப்படைத்தது.

## பிறந்தநாள் வாழ்த்து

❋ மருதனுமடம், சுகரட்னம் தங்கமலர் தம்பதியின் மகன் ஐங்கரன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்ருர்.

❋ கிளிநொச்சி இராமநாதபுரம், கனகலிங்கம் இந்திராதேவி தம்பதியின் மகன் நிர்மலன் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்ருர்.

## மாணவர் இடர் போக்குதலில் ஈழமுரசு பங்கு

(பூநகரி)

க.பொ.த.ப. சாதாரண வகுப்பு வரை உள்ள முழங்காவில் அரசினர் பாடசாலையில் மூன்ருண்டு இடைவெளிக்குப் பின் இப்போது ஆங்கில ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பாடசாலையில் ஆங்கில ஆசிரியர் இல்லாக்குறையை 'ஈழமுரசு' அண்மையில் சுட்டிக் காட்டி செய்தி வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆங்கில ஆசிரியர் நியமிக்கப்பட்டமைக்கு நன்றி தெரிவித்து பாடசாலை அபிவிருத்திச் சபையால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கிளிநொச்சி கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## நியமனம்

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் ஜனப் எம். எம். மன்சூரின் முயற்சியினுல் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி முடித்து வெளியேறிய 6 மனையியல் ஆசிரியர்கள் முல்லைத்தீவு கல்வி மாவட்டத்தில் ஆசிரியர் பற்ருக்குறையுள்ள பாடசாலைகளுக்கு இம்மாதம் தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்று கல்விப் பணிமனை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## நன்றி

(அரியாலை)

தொழில் அதிபர் திரு. க. கனகராசாவுக்கு சங்கிலியன் புனர்வாழ்வுக் கழகம் நன்றியைத் தெரிவித்துள்ளது.

சங்கிலியன் புனர்வாழ்வுக் கழக அகதிகள் முகாம் திறக்கப்பட்ட தினம் தொடக்கம் இரண்டு கிழமைக்கு எழுபத்திரண்டு சோப் வீதமும், குப்பைவாளி, அப்பியாசப் புத்தகங்கள், அறிவுரைப் புத்தகங்களும் வழங்கி, பாடசாலைப் பிள்ளைகளுக்கான வாய்ப்பாட்டு மட்டைகள், உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்க அகத்தி, மிளகாய் விதை போன்றவற்றையும் தந்தமைக்கு கடமைப்பட்டுள்ளோம் எனக் கூறியுள்ளது.

"சமய வளர்ச்சிக்காக சிவபுராணம், ஒழுக்நெறி நூல்களையும், நற்சிந்தனைகளையும் நூல் வடிவிலும், போதனையாகவும் அவர் வழங்கி வருகின்ருர். இவரின் ஆலோசனை, ஆசியில் எமது முகாமும், உற்பத்தி நிலையமும் சிறப்பாக இயங்கி வருகிறது. இவரைப் போன்ருேரின் சேவை தமிழ்களுக்குத் தேவை. இவர் 'மக்கள் சேவை மகேசன் சேவை' என்பதைக் குறிக்கோளாகக் கொண்டவரென்ருல் அது மிகையாகாது" என்றும் கழகம் தெரிவித்துள்ளது.


## ரான்ஸ் யூறே ரவல்ஸ்

அமெரிக்கா, கனடா

பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.

ந. மகேந்திரராசா

தொடர்பு:-

ரான்ஸ் யூறே ரவல்ஸ்
6, மொடல் மார்க்கட்
(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

B/1035 தொலைபேசி: 23831


## பிறந்த நாள் வாழ்த்து



செல்வி

இ. ஜெய்மி

ஜெர்மனியில் இருக்கும் இம்மானுவல் ஜெயா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி செல்வி "ஆன் ஜெய்மி" தனது மூன்ருவது பிறந்த தினத்தை இன்று 1986 தை 28ல் ஜெர்மனியில் சிறப்பாகக் கொண்டாடுகின்ருர்.

இவரை ஜெர்மனியிலுள்ள அவரது தாய், தந்தை பெரியன்ராவுடன்:கனடாவிலுள்ள தாய்மாமன்,மாமியும், யாழ்ப்பாணத்திலுள்ள அம்மப்பா, அம்மம்மா, அன்ராமார்,ஆச்சி, அப்பம்மா மற்றும் உற்ருர் உறவினர் யாவரும் புனித வேளாங்கண்ணித்தாயின் அருள்நிறைந்த சகல கலா வல்லியாக பல்லாண்டு வாழ்கவென்று வாழ்த்துகின்ருர்கள்.

இல. 82/1 நாலாம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம். R/1638


## A / L 87 (புதிய பிரிவு)

PURE / APPLIED MATHS :- திரு. நல்லையா

ஆரம்பம். 01. 02. 1986

JAFFNA TECHNICAL INSTITUTE

பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி
யாழ்ப்பாணம். (மேல்மாடி)

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. R/16385

## A/L 87 (புதிய பிரிவு)

பொருளியல்:- வரதராஜன் ஸ்ரீஸ்கந்தராஜா
கணக்கியல்:- ஜெயரட்ணம்
வர்த்தகம்:- கனகரட்ணம்
அளவையியல்:- கேசவன்

வகுப்புகள் நடைபெறுகின்றன

Jaffna Technical Institute

பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி, யாழ்ப்பாணம்.
(மேல் மாடி) R/16385

ஈழமுரசு



# தந்திக்கம்பி திருட்டு நீடிப்பு சிலர் மீது இளைஞர் கண்?

(புலோலி)

வல்லிபுரக் கோவில் பதிகுயிலிருந்து குடத்தனைக் கிராமம் வரையான தந்திக்கம்பங்கள் திருடப்பட்டுவருகின்றன. ஏற்கனவே இத் தந்திக்கம்பங்களின் கம்பிகள் யாவும் திருடப்பட்டுவிட்டன. தற்பொழுது கம்பங்களைத் திருடிச் செல்லும் நடவடிக்கைகள் அதிகரித்து வருவதனுல் இப்பகுதி மக்கள் பெரும் கவலையடைந்துள்ளனர்.

அண்மையில் இரவு வேளையில் தந்திக்கம்பங்களைத் திருடிக் கொண்டு வண்டிகளில் சென்ற திருட்டுக் கோஷ்டியொன்று இளைஞர் கோஷ்டியொன்றிடம் சிக்கிக் கொண்டது. இதனையடுத்து திருட்டுக் கோஷ்டியினர் இளைஞர்களால் நையப் புடைக்கப்பட்டனர்.

இத் தந்திக்கம்பத் திருட்டில் ஈடுபடுபவர்கள் கடும் நடவடிக்கைக்குட்படுத்தப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாகச் சிலர் தேடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பதவு உயர்வு

(அரியாலை)

யாழ்ப்பாண மாநகர சபையில் உள்ளகக் கணக்காய்வாளராகக் கடமையாற்றிய திரு. த. குணரட்ணம், முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திச் சபையில் முல்லைத்தீவுப் பட்டின அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

# செவிப்புலனற்றோர் நிதிக்கு கண்காட்சி நடைபெறும்

(வண்ணார்பண்ணை)

"எமது கழகத்திற்கு மேலும் நிதியுதவி தேவைப்படுகின்றது. எம்மால் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் பணம் எமது சங்க கட்டடவசதிகளை செய்து முடிக்க முடியாதுள்ளது. எனவே நாங்கள் யாழ். நகரில் ஒரு கண்காட்சி விழா ஒன்றினை நடாத்துவதன் மூலம் எமக்குத் தேவையான நிதியை பெற ஆலோசித்துள்ளோம். இதற்குரிய செலவினை யாழ். 'லயன்ஸ் கழகம்' உதவியளிக்க முன்வரவேண்டும்''

யாழ். செவிப்புலனற்றோர் நட்புறவு நிலைய ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் சங்கத்தின் தலைவர் திரு. க. சண்முகநாதன் தெரிவித்தார்.

இக் கூட்டத்திற்கு பிரதம விருந்தினராக யாழ். லயன்ஸ் கழகத் தலைவர் திரு. ஞா. யுகேந்திரன் கலந்து கொண்டு உரையாற்றுகையில், எமது கழகம் இயன்ற உதவிகளை செவிப்புலனற்றோர் நட்புறவு நிலையத்திற்கு வழங்கும். இப்பணத்தினைப் பெற்று தமது சங்கத்தினை திருத்தியமைத்து சங்கத்திலுள்ள அங்கத்தவர்கள் ஒற்றுமையுடனும் பலத்துடனும் வழவேண்டும் என்று சொன்னார்.

நடப்பு வருட நிர்வாகிகள் பின்வருமாறு:- போஷகர்: க. கோபாலகிருஷ்னன் (நவீல்ட் பாடசாலை அதிபர்), தலைவர் க. சண்முகநாதன், உப. தலைவர்; எஸ். துரைராசா செயலாளர்: க. நடராசா, பொருளாளர்: க. சுதாகரன், உப. பொருளாளர்: வி நந்தகுமார், உறுப்பினர் குழுவில்: எஸ். தவராசா, க. இரவீந்திரராசா, எஸ், சிவஞானம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# வவுனியா கமநல நிலைய கொள்ளையால் செயலிழப்பு

(வவுனியா)

வவுனியா புகையிரதநிலையத்திற்கு எதிரில் அமைந்துள்ள கமநலசேவை உதவி ஆணையாளரின் அலுவலகம் அண்மையில் ஆயுதம் ஏந்தியோரால் உடைத்துக் கொள்ளையடிக்கப்பட்டதை அடுத்து, அலுவலகம் செயலிழந்துள்ளது.

இங்கு பாவனையில் இருந்த ஒரே ஒரு தமிழ் டைப்ரைட்டரும், ஒரே ஒரு ஆங்கில டைப்ரைட்டரும் 3 தொலைபேசிகளும் கொள்ளையடிக்கப்பட்டன. இதனுல், தொலைவில் அமைந்துள்ள கச்சேரியுடனே அல்லது வேறு திணைக்களங்கள் அலுவலகங்களுடனே உடனடித் தேவைகளுக்காக தொடர்பு கொள்ளமுடியாமல் உள்ளதென்றும், அத்துடன் வறிய கிராமவாசிகளான விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டுடன் தொடர்புடைய அபிவிருத்தி வேலைகள் சம்பந்தப்பட்ட முக்கியமான கடிதப் போக்குவரத்துக்களையும் செய்யமுடியாதுள்ளதென்றும் அதிகாரி ஒருவர் கவலை தெரிவித்தார்.

இன்று நாட்டில் நிலவுகின்ற நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியிலும் வறிய விவசாயிகளின் வாழ்க்கை நன்மையுடன் தொடர்புடைய அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், அலுவலகத்தில் இடம்பெற்ற கொள்ளை காரணமாக கமநல சேவை ஆணையாளர் அலுவலகம் தனது சேவைகளை செவ்வனே செய்ய முடியாத ஓர் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

விவசாய மக்களின் வாழ்க்கை நலத்தில் அக்கறையும் கரிசனையும் மிக்கவர்கள், இக்கொள்ளையைக் கண்டிப்பதுடன், எடுத்துச் செல்லப்பட்ட பொருட்களை மீளவும் ஒப்படைக்கச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள முன்வரவேண்டும் என்றும் அந்த அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## ஜெயசீலன் அடிகள் உரை

# கிறிஸ்தவ சபைகளிடையே ஐக்கியம் ஏற்படவேண்டும்

(நல்லூர்)

"கிறிஸ்துவின் சரீரமாக விளங்கும் சபைகளுக்கிடையே ஐக்கியத்தையும், ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்தக் கடந்த பல நூற்றூண்டுகளாக முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்த இருபதாம் நூற்றூண்டிலே இம்முயற்சி பெருமளவில் வளர்ச்சியடைந்துள்ளது ஒரே இறைவனுகிய கிறிஸ்துவை விசுவாசிக்கும் நாம் நம்மிடையே ஐக்கியத்தை ஏற்படுத்துவது இன்று மிகவும் அவசியமாகிறது. இந்த ஐக்கியத்தின் மூலமே நாம், இறைவன் எமக்குப் பணித்த சுவிசேட ஊழியத்தை மேற்கொள்ள முயற்சி செய்ய வேண்டும். இந்த ஐக்கியத்தின் ஒரு சின்னமே கிறிஸ்தவ ஐக்கிய வார நிகழ்ச்சியாகும்.''

இவ்வாறு யாழ். வை. எம். சி. ஏ மண்டபத்தில் நடைபெற்ற கிறிஸ்தவ ஐக்கிய வார இறுதிநாள் நிகழ்ச்சியில் கத்தோலிக்க சமயச் சார்பில் கலந்துகொண்ட சுவாமி ஜெயசீலன் அடிகளார் அருளுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அங்கிலிக்கன் திருச்சபையின் சார்பில் கலந்து கொண்ட அருட்திரு. யே. சர்வாநந்தன் அடிகளார் ஆரம்ப ஜெபத்தை ஏறெடுத்து ஆரம்ப அருளுரையை நிகழ்த்தினுர். திரு. ஜெயராசா வேதாகமப் பாடத்தை வாசித்தார். மெதடிஸ்த திருச்சபையின் சார்பில் அருட்திரு. கோவிந்தராஜ் அடிகளார் அருளுரை நிகழ்த்தினுர். தேவ சபையைச் சேர்ந்த சகோதரன் போல்ராஜ் அவர்கள் இறுதி ஜெபத்தை ஏறெடுத்து ஆசீர்வாதம் வழங்கினுர்.

இந்த ஆராதனையில் ஏராளமான ஆண்களும், பெண்களும் கலந்து கொண்டனர்.

## 1983ம் ஆண்டுக்குப் பின் வன்செயல்களால்

# விதவைகளான 50 பேருக்கு கிளிநொச்சியில் புனர்வாழ்வு

(வவுனியா)

1983ம் ஆண்டிற்குப் பின்னர் ஏற்பட்ட சம்பவங்களில் தமது கணவரை இழந்ததனுல், திக்கற்ற நிலையில் தவிக்கும் ஏழை விதவைகளுக்குப் புனர்வாழ்வளிப்பதற்கான திட்டம் ஒன்றை சர்வோதயம் கிளிநொச்சியில் அமுல் செய்யவிருக்கின்றது. இதற்கான ஏற்பாடுகளை வட பகுதி வெளிக்கள இயக்குநர் திரு. க. கதிரமலை மேற்கொண்டுள்ளார்

வசதியற்ற 50 விதவைகள் இதன் மூலம் குடியிருப்பதற்கான காணியுடன் சேர்ந்த வீடுகளைப் பெறுவார்கள். அத்துடன் இத்திட்டத்தில் விசேட அம்சமாக அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக கால்நடை வளர்ப்பதற்குரிய உதவிகளும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

குடியிருப்பதற்குரிய காணி வீடுகள் இல்லாத ஏழைப் பெண்களுக்கே இத் திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படும். இத்தகைய வசதியற்ற பாதிக்கப்பட்ட ஏழை விதவைப் பெண்களைப் பற்றி விபரங்களை பொதுநல ஸ்தாபனங்களிடமிருந்தும் எதிர்பார்க்கப் படுகின்றது.

இத் திட்டம் தொடர்பான ஏனைய மேலதிக விபரங்களை சர்வோதய இயக்கத்தின் வட பகுதி வெளிக்கள இயக்குநர் திரு. க. கதிரமலையிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

## முழங்காவில் அபிவிருத்திக்கு

# நிதிவழங்க வேண்டுமென அரச அதிபரிடம் முறையீடு

(பூநகரி)

பல அபிவிருத்தி வேலைகள் செய்யப்படவேண்டிய குடியேற்றத் திட்டங்களை உள்ளடக்கிய முழங்காவில் பிராந்தியநதுக்கு, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரினுல் மாவட்ட அபிவிருத்தி வேலைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 56 இலட்சம் ரூபாவில் ஒரு அபிவிருத்தி வேலைகளுக்காகவும் நிதி ஒதுக்கப்படாமை சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

முழங்காவில் குழாய்க்கிணற்றுத் திட்டக் கூட்டுறவுச் சங்கச்செயலாளர் திரு. ரி. ஏரம்பமூர்த்தி மகஜர் ஒன்றை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

அம்மகஜரில், "மிக அவசியமாக தீர்வு காணப்படவேண்டிய முழங்காவில் பாடசாலை நீர் தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு பாடசாலை வளவினுள் ஓர் குழாய்க் கிணறு அமைக்கவும், முழங்காவில் அரசினர் வைத்தியசாலைக்கு ஓர் நோயாளர் தங்கும் வாட் அமைக்கவும் நிதி ஒதுக்கிஉதவி இப்பகுதி மக்களுக்கு ஆறுதல் அளிக்குமாறு கேட்டுள்ளார்.

இவ்விடயம் சம்பந்தமாக அரசாங்க அதிபரைச் சந்திக்க ஓர் தூது கோஷ்டியினர் செல்ல ஏற்பாடும் செய்யப் படுகின்றது.

# 'முதலுதவி பயிற்சி மூலமாக கிடைக்கும் நன்மைகள் பல'

(சரசாலை)

கொடிகாமம் தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் முதலுதவி பயிற்சி வகுப்பொன்றை நடாத்தியது. இதில் தொண்ணூற்று ஐந்து பேரளவில் பயிற்சி பெற்றனர். மேற்படிப் பயிற்சி வகுப்பை கொடிகாமத்தில் யாழ்ப்பாணம் வளர்ந்தோர் கல்வியதிகாரி திரு. சி. எஸ். சுப்பிரமணியம் ஆரம்பித்து வைத்து உரைநிகழ்த்துகையில், "விஞ்ஞான முறையில் முதலுதவியை பதினுறு வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் அறிந்து வைத்திருத்தல் மிக அவசியமாகும். எனவே இப் பயிற்சி அறிவு மிகவும் தேவையானதொன்ருகும். எல்லா நேரத்திலும் வைத்தியநிலையம் செல்ல முடியாமல் போகலாம். ஒவ்வொருவரும் தயக்கமின்றி முதலுதவி அறிவை அறிந்து வைத்திருப்பதன் மூலம் தமக்கோ, பிறர்க்கோ பயன்படக்கூடிய விதத்தில் பயன்படுத்தலாம்'' என்ருர் சுகாதாரப் படக்காட்சி மூலமும் நோய்த்தடுப்பு பற்றி விளக்கமளிக்கப்பட்டது. திரு. பொ. சிவப்பிரகாசம் (சுகாதாரப் பரிசோதகர்), திரு. சிவ. மனோகரன் (யாழ். மருத்துவ பீடம்) உட்பட மேலும் பலரும் உரை நிகழ்த்தினர்.

# இரத்ததானம் செய்தால் கோடி புண்ணியம் கிடைக்கும்

(உடுவில்)

"தானங்களுள் சிறந்தது இரத்த தானம்'' இதை வழங்குவதனுல் நாம் நோய்வாய்ப்படுவதோ அன்றி இறப்பதோ இல்லை. மரணத் தறுவாயில் இருக்கும் உயிருக்கு எம்மால் இயன்ற உதவியை செய்வதனுல் கோடி புண்ணியம் கிடைக்கின்றது. தற்பொழுது அரசாங்கமோ அல்லது அரச சேவையிலுள்ள தொண்டர்களோ யாழ். வைத்தியசாலைக்கு இரத்தம் கொடுப்பதில்லை. எனவே இப்படிப்பட்ட கிராம மக்களின் உதவியினுல் தான் இரத்த வங்கியில் அதனை சேமித்து வைக்க முடியும். இச் சேவைக்கு பெற்றோர்களின் ஒத்துழைப்பும் அவசியம்.

இவ்வாறு இணுவில் 'மக்லியட்' தனியார் வைத்தியசாலையில் அப்பகுதி கிராம முன்னேற்றச் சங்கமும், சமாதான சபையும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இரத்த தான வைபவத்தில் யாழ் அரசினர் வைத்தியசாலை இரத்த வங்கிப் பொறுப்பாளராகிய டாக்டர் திரு. க. வடிவேலு குறிப்பிட்டார்.

உடுவில்ப் பகுதி சுகாதார பரிசோதகர் திரு. க. தங்கவேலாயுதத்தின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் டாக்டர் தொடர்ந்து உரையாற்றுகையில்:- 'இரத்தம் வழங்க விரும்புகிறவர்கள் திடகாத்திரமாகவும், செங்கமாரி, மலேரியா, நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்கள் வராதவர்களாக இருக்கவேண்டும். இலை வகைக் கறிகளை அதிகளவில் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஒருவரிடமிருந்து பெறப்படும் இரத்தம் 21 நாட்களுக்கே பயனுடையதாக விருக்கும் என்ருர்.

இணுவில் பகுதி பாடசாலை மாணவ, மாணவிகள், ஆரம்ப சுகாதாரத் தொண்டர்கள், இளைஞர்கள், யுவதிகள் ஆசிரியர்கள் உட்பட சுமார் 60க்கும் மேற்பட்டோர் இரத்த தானம் செய்தனர், கிராமிய மட்டத்தில் இரத்ததானம் வழங்கியமை இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ் பெரியாஸ்பத்திரி டாக்டர் செல்வி. யசோதரா ஆறுமுகம், வலி. தெற்கு பிரதேச சபைத்தலைவர் திரு. செ. இலகுநாதன், இணுவில் சமாதான சபைத்தலைவர் திரு. தி. சி. சண்முகலிங்கம் ஆகியோரும் கருத்துரை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் பங்குபற்றிய அனைவருக்கும் திரு. தி சி. சண்முகலிங்கம் நன்றி தெரிவித்தார்.

## ஏற்பாடு

(சரசாலை)

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபராகக் கடமையாற்றி இளைப்பாறிய க, மகேஸ்வரனுக்கும் ஆசிரியையாக கடமையாற்றி இளைப்பாறிய திருமதி வெற்றிவேலுவுக்கும் சேவை நலன் பாராட்டு விழா ஒன்றை நடாத்த கல்லூரி மாணவர்கள் ஆசிரியர்கள் ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க

## ஈழ விடுதலை பேரணி அறிக்கை

"தமிழ், முஸ்லிம், மலையக மக்களாகிய எமது தேசிய இன விடுதலைப் போராட்டத்தை நசுக்கி எமது மண்ணை ஆக்கிரமித்து இராணுவமயப் படுத்தும் நோக்கத்துடன் ஸ்ரீ லங்கா இனவெறி அரசு தமது கூலிப் படைகளின் முகாம்களை மையமாகக் கொண்ட பகுதிகளை பாதுகாப்பு வலயமாக பிரகடனப் படுத்தியுள்ளது. இது தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் பாரம்பரிய பிரதேசங்களை இராணுவ மயப்படுத்தும் நிலை ஏற்படுத்தும். இதனுல் எமது மக்கள் உயிர், உடைமை, மானம் அனைத்தும் பறிக்கப் படுவார்கள். இதற்கு முன் இந்த பாதுகாப்பு வலய சட்டத்தை தகர்த்தெறிய மக்களே முன்வந்து நம் மண்ணை காக்கவேண்டும்.'' இவ்வாறு ஈழ விடுதலை பேரணி விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதய சிந்தனை

"ஈசலுக்கு சிறகு முளைப்பது அழிவுக்குத்தான். மனிதனுக்கு ஆசை பிறப்பதும் அவ்வாறே" —ரவீந்திரநாத் தாகூர்...

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 23336


## இதய ஒலி

28-1-86 செவ்வாய்க்கிழமை (குரோதன) தை-15

# போராட்டத்துக்கு பிரசாரமும் ஒரு ஆயுதம்

கடந்த வாரம் இருதயபுரத்தில் இடம்பெற்ற சம்பவத்தில் கொல்லப்பட்ட இருபத்தொரு பேருக்கும் பயங்கரவாதிகள் என்று நாமம் போடப்பட்டது போல, அங்கு கைதான அப்பாவிகளுக்கும் அதே நாமம் சூட்டப்பட்டுள்ளது.

அவசரகால விதிகளின் கீழ் கைதாகும் தமிழர்கள் அனைவருமே இப்போது பயங்கரவாதிகளாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

வெலிகடை, பூஸா கதவுகள் வந்தாரை வரவேற்க அகலத் திறந்து வைக்கப்பட்டுள்ளதால், தமிழ் மண்ணில் வசிப்பவர்களைக் கைது செய்யும் நிகழ்வுகள் தொடர்ந்து கொண்டேயிருக்கும் என்பதில் எவரும் சந்தேகம் கொள்ள இடமில்லை.

இதன் ஓர் அங்கமாகவே கல்முனைப் பகுதியிலுள்ள வரலாற்றுப் புகழ்பெற்ற பாண்டிருப்பில் இருநூறு தமிழர்கள் இரு தினங்களுக்கு முன்னர் கைதானார்கள்.

கைதானவர்களின் எண்ணிக்கை நூற்றைம்பது என அரசாங்க அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஆனால் சுமார் ஐநூறுபேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கூட்டணியைச் சேர்ந்தவரான முன்னாள் மாவட்ட சபை உறுப்பினர் திரு. வேல்முருகு புகார் செய்துள்ளார்.

நேற்று இதே பகுதியில் நாம் குறிப்பிட்டதுபோல தமிழர் அழிப்புப் படலத்தின் ஓர் காட்சியாக கைது செய்து தடுத்து வைப்பது இடம்பெறுகின்றது.

கண்டகண்ட இடங்களில் கட்டாக்காலி நாய்களைச் சுடுவது போல தமிழர்கள் துப்பாக்கி ரவைகளுக்குப் பலியாக்கப்பட்டு வருகின்றார்கள்.

இவற்றைத் தடுக்க வழி தெரியாது தமிழினம் தத்தளித்துக் கொண்டிருக்கையில், சோதனை என்ற பெயரில் இடம்பெறும் சுற்றி வளைப்பின் மூலம் ஆயிரக் கணக்கான தமிழர் கைதாகி வருகின்றனர்.

ஏற்கனவே கைதான பல நூற்றுக் கணக்கான தமிழர்கள் இன்னமும் பூஸா, வெலிகடை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

தமிழினத்தை மேலும் சிறுபான்மையினமாக்கவும், தமிழ் மண்ணை ஆக்கிரமிக்கவும் சட்டம், பாதுகாப்பு, பயங்கரவாத ஒழிப்பு என்ற பெயர்களில் ஆட்சியாளர்கள் தினசரி எடுத்து வரும் நடவடிக்கையின் பலாபலனை இப்போது உணரத் தவறினால், மக்கள் எப்போதுமே உணர முடியாது.

தமக்குச் சாதகமான வெகுஜன தொடர்புச் சாதனங்கள் மூலம் உண்மைகளை மறைத்து, அப்பட்டமான பொய்களை அவர்கள் பிரசாரம் செய்து வருகின்றனர்.

திருப்பித் திருப்பி ஒரே பொய்யைச் சொன்னால், அதுவும் கூட உண்மையாகி விடலாம் என்ற ஆபத்தை நம்மவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

துப்பாக்கி ரவை, குண்டுகள், றொக்கட் லோஞ்சர்கள், கடல் பீரங்கிகள், மோட்டார்கள் ஏவுகணைகள் என்ற சகலவகையான ஆயுதங்களையும் "பாதுகாவலர்கள்" பயன்படுத்தும் யுத்த பூமியாக வடக்கும் கிழக்கும் மாறிவருகின்றன.

சுதந்திரம் வேண்டிப் போராடும் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் பயங்கரவாத தாக்குதல்களில் பலியான, காயமடைந்த, பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய சரியான கணக்கொடுப்பொன்று இப்போது அவசியமாகின்றது.

1983 ஜூலை மாதத்திற்குப் பின்னர், வெளி மாவட்டங்களிலிருந்து, வடக்குக் கிழக்குக்கு இடம்பெயர்ந்தவர்கள் பற்றிய முழு விபரமும் சேகரிக்கப்படவேண்டும்.

நடவடிக்கைகளுக்குப் பதில் நடவடிக்கைகள் எடுப்பதுடன், பொய்ப் பிரசாரத்துக்கு பதில் பிரசாரமும் மிகமிக அத்தியாவசியம் என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் மறந்து விடக்கூடாது.

கொலை, கைது, கொள்ளை, வீடுடைப்பு, கட்டடங்கள் எரிப்பு என்று பல வகைப்பட்ட தாக்கங்கள் பற்றியும் சரியான விபரங்கள் சேகரிக்கப்படவேண்டும்.

வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் தமிழர் பகுதிகளுக்கு வர தடைசெய்யப்பட்டுள்ளனர்.

எனவே, தகவல்கள் அவர்களைத் தேடிச் செல்ல வைக்க வேண்டும்.

போராட்டம் வெற்றிபெற பிரசாரமும் ஒரு ஆயுதமாகும்.

★ ஈழமுரசு லண்டன் நிருபர் ர. ஜெ. கொன்ஸ்டன்ரைனுக்கு திரு. அ. அமிர்தலிங்கம் அளித்த பேட்டியின் இரண்டாம் பகுதி இது. முதற்பகுதி நேற்று வெளியானது.

# சுதந்திரம் பெற்ற பின்னர் யார் ஆட்சி நடத்துவதென மோதுவதைத் தவிர்ப்போம்

கேள்வி: இம் மாற்றுத் தீர்வைச் சமர்ப்பித்ததன்மூலம் கூட்டணி இன்னும் யூ. என். பி அரசாங்கத்தில் நம்பிக்கை இழக்கவில்லையென்ற கருத்து சிலரிடம் நிலவுகின்றது. இது பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

பதில்: அது தவறான கருத்து! எமக்கு இலங்கை அரசிடம் நம்பிக்கையில்லை என்பதை நான் பலமுறை திரு. ராஜீவ் காந்தியிடம் கூறிவிட்டேன். கடைசியாக மாற்றுத்திட்டத்தைச் சமர்ப்பிக்கும் போது கூட நாம் அதை எழுதிக் கொடுத்தோம். ஆனால் நாம் இந்திய அரசை நம்புகின்றோம். அவர்களின் நல்லெண்ணத்தை இழக்கவிரும்பவில்லை.

கேள்வி: அண்மையில் வெளியாகிய பிரசுரமொன்றில் யுத்த நிறுத்தத்தை கண்காணிக்க சர்வதேச குழுவொன்று வேண்டுமென இயக்கங்களினால் கேட்கப்பட்ட வேண்டுகோள் கூட்டணியினரால் ஏற்கப்படவில்லையென குற்றம் சாட்டப்பட்டிருந்ததே. அது உண்மையா?

பதில்: அது முழுப்பொய். இதை முதலில் கூறியது நாம் தான். ENLF இதற்கு 21 பெயரைக் கொண்ட பட்டியலொன்றைச் சமர்ப்பித்தது. அப்போது கூட நாம் சர்வதேச குழுவொன்று தேவையென்றே வற்புறுத்திக் கொண்டிருந்தோம். நாம் இதற்குமிகவும் சிரத்தை எடுத்தோம்.

கேள்வி: இப்போது சாதாரணகுழு நியமிக்கப்பட்டு விட்டது. இன்னும் நீங்கள் சர்வதேச குழு வேண்டுமென இந்தியாவைவற்புறுத்தி வருகிறீர்களா?

பதில்: யுத்த நிறுத்தம் இருந்தால் தானே அதை கண்காணிக்க குழு தேவை!

கேள்வி: இவ் யுத்த நிறுத்த மீறலுக்கு யார் காரணம் என கருதுகின்றீர்கள்?

பதில்: இது இலங்கை அரசாங்கத்தின் உள்ளத் தூய்மையற்ற போக்கின் விளைவு என்று கூறுவதே பொருத்தமாக இருக்கும்.

கேள்வி: ஈழப் பிரச்சினையில் ராஜீவின் அணுகு முறையைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: ராஜீவ் தனது முக்கிய மூன்று நிலைகளையும் தெளிவாக கூறியுள்ளார். முதலாவது, இந்திய அரசு இலங்கையிடம் நாட்டைப் பிரிக்கும்படி கேட்க முடியாது. இரண்டாவது, நேரடியாக இராணுவத்தை அனுப்பி தலையிட முடியாது, மூன்றாவது, இந்தியாவில் நிலவுகின்ற மாநிலசுயாட்சிக்கு அதிகமாகக் கேட்கவும் முடியாது. இவை மூன்றையும் திரு ராஜீவ் திட்டவட்டமாக கூறிவிட்டார்.

கேள்வி: இதை இந்திரா காந்தியின் கொள்கைக்கு வித்தியாசமானது என நீங்கள் கருதுகின்றீர்களா?

பதில்: இது கொள்கை மாற்றமில்லையென்று தான் நினைக்கிறேன். முன்பு இதை இந்திரா காந்தி வெளிப்படையாக கூறவில்லை. ஆனால் ராஜீவ் கூறியுள்ளார்.

கேள்வி; அடிப்படையில் வித்தியாசம் இல்லையென உறுதியாக கூறுவீர்களா?

பதில்; இல்லையென்று தான் நான் நினைக்கிறேன். அப்படித் தான் ராஜீவும் கூறினார்.

கேள்வி: ராஜீவ்காந்தி ஏதாவது உறுதிமொழி தந்திருக்கிறாரா?

பதில்: ஆம்... ஈழத்தமிழர்களை என்றும் கைவிடமாட்டேன் எனப் பலமுறை கூறியுள்ளார்.

கேள்வி: ராஜீவின் கொள்கையில் மாற்றமில்லையென கூறுகிறீர்கள். ஆனால் நடைமுறையில் ஏதாவது வித்தியாசத்தை உணர்கிறீர்களா?

## "இருதரப்பிலும் நான் குறிவைக்கப்பட்டுள்ளேன்"

பதில்; ஆம்... நடைமுறையில் வித்தியாசமுள்ளதை நாம் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

கேள்வி: அவற்றை சுருக்கமாக கூற முடியுமா?

பதில்: ஒன்று இந்தியா வெளிப்படையாகத் தாக்க மாட்டாது என கூறியது ராஜீவ் அரசாங்கம் தான். ஆனால் இந்திரா அரசாங்கம் இலங்கை அரசாங்கத்தின் இப் பயத்தைப் பயன்படுத்தி அதைச் சாதகமாக்கியது. இந்திரா காந்தி இதை ஒருபோதும் தெளிவாக கூறியதில்லை.

இரண்டாவது திரு. ராஜீவ் காந்தி தற்போது தமிழ் தீவிரவாதிகள் இந்தியாவிலிருப்பதை வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ளார். இதனால் இந்தியா சமாதானத் தீர்வை மட்டும்தான் எடுக்க முடியுமென்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

கேள்வி: இது ஈழப் போராட்டத்திற்கு ஒரு பாதிப்பென நீங்கள் கருதவில்லையா?

பதில்: பாதிப்பு என்று கூறுவதைவிட சிறு 'பின்னடைவு' என்று கூறுவது பொருத்தமாக இருக்கும்.

கேள்வி: ராஜீவின் இப் புதிய அணுகுமுறைக்கு என்ன காரணம்?

பதில்; பிராந்திய சூழ்நிலைகள் காரணமாக இருக்கலாம் எனினும் இதை விவாதித்துக் கொண்டு போகாமல் எமது அடிப்படை இலட்சியத்தை விட்டுக் கொடுக்காத வரையிலும் இந்தியாவில் நல்லெண்ணத்தை இழக்காத வகையிலும் செயற்படுவதுதான் புத்திசாலித்தனமாக இருக்கும்.

கேள்வி: திம்பு பேச்சு வார்த்தைகள் மீண்டும் தொடருமா?

பதில்; நிச்சயமாக இல்லை. இனி ஏதாவது பேச்சு வார்த்தைகள் தொடர்வதாக இருந்தால் நாங்கள் முன்வைத்த அடிப்படைக் கோரிக்கைகளை ஆராய்ந்து இலங்கை அரசு ஏதாவது உருப்படியான திட்டத்தை முன்வைத்தால் பேச்சுவார்த்தைகள் தொடரும். இனி எக் கட்டத்திலும் பேச்சுவார்த்தைகள் தொடருமாகில் எமது மக்கள் கொலை செய்யப்படமாட்டார்கள் என்ற உறுதிமொழியை இலங்கை அரசாங்கம் எமக்குத் தர வேண்டும். அல்லது பேச்சு வார்த்தைக்கு இடமேயில்லை.

கேள்வி: நீங்கள் முன்வைத்த மாற்றுத் தீர்வை விடுதலை இயக்கங்கள் ஏற்றுக்கொள்ளுமென நினைக்கிறீர்களா?

பதில்: அதை நான் கூற முடியாது. ஆனால் இயக்கங்களினதும் குறைந்தபட்ச கோரிக்கை இதுதான் என இந்திய அரசினால் எமக்குத் தெரிவிக்கப்பட்டது.

கேள்வி: PLOT உடன் உங்களுக்கு நெருங்கிய உறவு இருப்பதாக கூறப்படுகிறது உண்மையா?

பதில்: அது தவறான பிரச்சாரம்; அப்படியொன்றும் இல்லை.

கேள்வி: இந்த அபிப்பிராயம் வளர காரணம் என்ன?

பதில்: சென்றவருட ஜனவரி மாதத்தில் PLOT, TULF, LTTE, TELO, EPRLF, EROS, TELA ஆகிய 6 இயக்கங்களும் கூட்டாக இணைய பேச்சு வார்த்தைகள் நடாத்தினோம். அடுத்த கூட்டம் பங்குனி 8ம் திகதி கூட இருந்தது. அதனுள் ஏற்பட பிரச்சினைகளால் EPRLF, TELO, EROS, தனியாக ஒன்றாகியது. பின்னர் புலிகளும் சேர்ந்து கொண்டனர். இதனால் விடுபட்ட நாம் மூவரும் ஒன்றாக இருப்பதாக பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. நான் அதை முற்றாக மறுக்கிறேன்.

கேள்வி: சந்ததியாரின் கொலைக்கு நீங்களும் காரணம் என சில பிரச்சாரங்கள் லண்டனில் விநியோகிக்கப்பட்டதே? இது உண்மையா?

பதில்: இது முழுப் பொய்.

கேள்வி: இக்கொலை தொடர்பாக கைதுசெய்யப்பட்ட எட்டு பேரை விடுவிக்கும்படி நீங்கள் இந்திய பொலிஸ் அதிகாரியை

... 5ம் பக்கம் பார்க்க

### மத்தியதரை கடலில் நடமாடும்

# அமெரிக்க கடற்படைக்கு

# கேர்ணல் கடாபி எச்சரிக்கை

(திரிப்பொலி)

லிபியாவின் கடல் பகுதியில் அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் பிரவேசிக்குமானால் லிபியா அவற்றின் மீது தாக்குதலை நடாத்த தயங்காது என்று லிபிய தலைவர் கேர்ணல் கடாபி மீண்டும் எச்சரித்துள்ளார். இதனால் ஒரு யுத்தம் மூளுமென்றும் அவர் அமெரிக்காவிற்கு எச்சரித்துள்ளார். லிபியா மீது அமெரிக்கா பொருளாதாரத் தடையை விதித்துள்ளதையடுத்து இரு நாடுகளுக்குமிடையில் நெருக்கடி நிலைமை தோன்றியுள்ளது தெரிந்ததே.

லிபியாவின் வடகடல்பகுதியான சிர்த்தே வளைகுடாவில் இருபத்தாறு அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் அணி வகுத்து பயிற்சியில் ஈடுபட்டுள்ளன. அவற்றில் இரண்டு விமானம் தாங்கிக் கப்பல்களும் அடங்குகின்றன.

கேர்ணல் கடாபி லிபிய கடற்படை ரோந்துக் கப்பலில் வளைகுடாப் பகுதிக்கு நேற்று செல்லும்போது இந்த எச்சரிக்கையை விடுத்ததாக அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை லிபியா மீது அமெரிக்காவும், இஸ்ரேலும் தாக்குதல் நடாத்தலாம் என்பதால் அங்கு இராணுவ முஸ்தீபுகள் நடைபெற்று வருகின்றன.

## பம்பாய் இனிமேல் மும்பாய்

இந்தியாவின் முக்கிய நகரங்களில் ஒன்றான 'பம்பாய்' இனிமேல் 'மும்பாய்' என்றே அழைக்கப்படும். ஏழு மீனவக் கிராமங்களைக் கொண்டிருந்த பகுதியைச் சேர்ந்த இந்நகரில் மும்பாய் தேவி என்ற கடவுள் இருந்ததாகவும் அதிலிருந்தே முப்பாய், என்பதும் பம்பாய் என்ற பெயரும் வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## நாடு திரும்பினர்

(பம்பாய்)

தெற்கு யேமனிலுள்ள 44 இந்தியர்கள் நேற்று விசேட விமான மூலம் பம்பாய் வந்து சேர்ந்தனர். அங்குள்ள இந்தியர்கள் பாதுகாப்பாக இருந்ததாக அறிவிக்கப்படுகிறது ஏற்கனவே 69பேர் வந்துள்ளனர்.

## குண்டு வெடிப்பு 12 பேர் பலி

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பன்னிரண்டுபேர்மரணமானுர்கள். பத்துப்பேர் காயமடைந்துள்ளனர். இது இரண்டாவது குண்டுவெடிப்பு சம்பவமாகும்.

# பாப்பரசர் கொலை எச்சரிக்கை

# தமிழக முதல்வருக்கு தந்தி

பாப்பரசர் இரண்டாம் அருள் சின்னப்பர் அடுத்தமாதம் தமிழ் நாட்டுக்கு வருகை தருப்போது அவரைக் கொலை செய்யப் போவதாக தமிழ் நாட்டில் உள்ள ஸ்தாபனம் எச்சரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாப்பரசர் விரைவில் இந்தியாவுக்கு விஜயம் செய்யும்போது அவர் தமிழ்நாட்டிற்கும் விஜயம் செய்யவிருப்பது தெரிந்ததே. தமிழ் நாட்டிற்கு விஜயம் மேற்கொண்டால் பாப்பரசர் கொலைசெய்யப்படுவார் எனத் தெவிக்கப்படும் தந்தி ஒன்று தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி இராமச்சந்திரனுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை பாப்பரசர் இந்தியாவிற்கு விஜயம் செய்வதை இந்து தீவிரவாதிகள் சிலர் எதிர்த்து வருவதனுல் அவரின் வருகையையொட்டி பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. இது சம்பந்தமாக வத்திக்கானிலிருந்து விசேட பாதுகாப்பு அதிகாரிகள் இந்தியா வந்துள்ளனர். பாப்பரசரின் பாவிப்பிற்கென குண்டு துளைக்க முடியாத கார் ஒன்றும் இந்தியாவிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது தெரிந்ததே.

## ஈரானில் ரொக்கட் தாக்குதல் ஐவர் மரணம்; 20 பேர் காயம்

(தெஹ்ரான்)

தென் ஈரான் பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் மீது ஈராக் நடாத்திய ரொக்கட் தாக்குதலினுல் ஐவர் கொல்லப்பட்டு இருபது பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தால் இந்த எண்ணெய் நிரப்பும் பகுதியும் சேதமடைந்து தீப்பிடித்ததாக ஈராக் அறிவித்தது.

### வெஸ்ட்லன் ஹெலிகப்டர் கம்பனி விவகாரம்

# பிரிட்டிஷ் அரசின் சர்ச்சைகளால் கைத்தொழில் அமைச்சரும் ராஜினுமா

(லண்டன்)

பிரிட்டிஷ் வெஸ்ட்லன் ஹெலிகப்டர் தொழிற்சாலை தொடர்பாக பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் ஹெசல்ரைன் சில தினங்களுக்கு முன்பு ராஜினுமாச் செய்ததையடுத்து வர்த்தக தொழில் அமைச்சர் லியோன் பிறிட்டனும் நேற்று ராஜினுமா செய்தார்.

இக்கம்பனி தொடர்பாக அமைச்சரவை ரகசியங்களை இவர் வெளியிட்டதால் பிரிட்டிஷ் அரசில் இவருக்கும் பிரதமர் மாகிரட் தட்சருக்கும் இடையில் சர்ச்சை ஏற்பட்டுள்ளதாலேயே இவர் பதவி விலகினுர்.

இதேவேளை கன்சர்வேட்டிவ் கட்சியில் பிளவு ஏற்படுமா என்ற கேள்வி அரசியல் வட்டாரத்திடம் ஏற்பட்டுள்ளது.

## இரேக்க பிரதமர் பாரதம் விஜயம்

(புதுடில்லி)

கிரேக்க நாட்டுப் பிரதமர் திரு. அந்திரியோஸ் பாப்பாந்திரோ நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு பாரதம் வந்துள்ளார். இவர் பிரதமர் ராஜிவ் காந்தியுடன் பேச்சுக்கள் நடாத்துவார்.

### வட அயர்லாந்து இடைத்தேர்தல்

# புரட்டஸ்தாந்து உறுப்பினர் அமோக வெற்றி பெற்றனர்

(லண்டன்)

வட அயர்லாந்துக்கும் பிரிட்டிஷ் அரசுக்கும் இடையிலான சமாதான ஒப்பந்தத்தை வட அயர்லாந்து புரட்டஸ்தாந்து சமயத்தினர் எதிர்த்துள்ளனர். இதனுல் இங்கு இடம்பெற்ற இடைத்தேர்தல்களில் பதினைந்து இடங்களில் பதினன்கு இடங்கள் புரட்டஸ்தாந்து ஆதரவாளருக்கு கிடைத்துள்ளன.

அயர்லாந்தில் கத்தோலிக்கர்களுக்கும், புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களுக்குமிடையில் சர்ச்சைகளும் கலவரங்களும் ஏற்பட்டுள்ளதால் இந்த ஒப்பந்தம் இடம்பெற்றது. இதனை எதிர்த்து புரட்டஸ்தாந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் ராஜினுமா செய்ததினுல் இந்த இடைத் தேர்தல்கள் நடைபெற்றன.

# சின்னஞ்சிறு செய்திகள்

## ஏகமனதாக தெரிவு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பரிஷ் தெங்கு பனம் பொருள் விற்பனவு சங்கத்தின் முதலாவது தலைவராக திரு. யோ செபஸ்தியாம்பிள்ளை ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆக்க ஆணையாளர் திரு. எஸ். வேலாயுதபிள்ளை தலைமையில் சங்க தொழில்பரப்பில் உள்ள மூன்று கிராம சேவகர் பிரிவிலுமிருந்து தலா மூன்று பிரதிநிதிகள் வீதம் ஒன்பது பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களில் ஒருவர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட போதே திரு. யோ. செபஸ்தியாம் பிள்ளை தலைவராகவும் திரு. நா. சூசைப்பிள்ளை உப தலைவராகவும் திரு [illegible]. சிந்தாத்துரை செயலாளராகவும் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டனர்.

முன்பு வலி-தென் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரதேச தெங்கு, பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம க இயங்கிய சங்கம் இரண்டாக பிரிந்து இயங்க வேண்டுமென அங்கத்தவர் விரும்பியதை அடுத்து பண்டத்தரிப்பு, சில்லாலை கிராம சேவகர் பிரிவு, மாதகல் கோடலிக்காடு கிராம சேவகர் பிரிவு, விளான் இளவாலை கிராம சேவகர் பிரிவு ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக புதிய பண்டத்தரிப்பு பரிஷ் தெங்கு, பனம் பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கம் ஆரம்பித்து பதிவு செய்யப்பட்டுள்ளது.

எண்பத்தைந்து மார்கழி மாதம் திரு. பொ. பரமானந்தன் என்பவரை பொது முகாமையாளராகக் கொண்டு தொழிற்பட தொடங்கிய சங்கம் டிசம்பர் மாதத்திலே கணிசமான இலாபம் ஈட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கும்பாபிஷேகம்

(பூநகரி)

மன்னார் பூநகரி வீதியில் முழங்காவிலில் கோயில் கொண்டிருக்கும் சரித்திரப் பிரசித்தி பெற்ற பிள்ளையார் ஆலயத் திருப்பணி வேலைகள் மூன்றுண்டு காலமாக தொடர்ந்து நடைபெற்று முடிவுறுந்தறுவாயில் உள்ளது.

சிற்பக் கலையில் கைதேர்ந்தவர்களால் தூபி அமைக்கும் வேலை விரைவாக நடைபெற்று வருகிறது மாசி நடுப்பகுதியில் கும்பாபிஷேகம் நடைபெற ஏற்பாடு செய்யப்படுகிறது.

## புலோலியில் கருத்தரங்கு

(புலோலி)

வடமராட்சி கால் நடை வளர்ப்போர் சங்கம், விலங்குகளுக்கான நோய்களும் அவற்றைத்தடுக்கும் வழிவகைகளும் பற்றிய கருத்தரங்கொன்றை இம்மாசம் 25ம்திகதி புலோலி கமநலச்சேவை நிலையத்தில் யாழ் பல்கலைக்கழக விலங்கியற்றுறைப் போராசிரியரும் சங்கத் தலைவருமான திரு. வீ கே. கணேசலிங்கம் தலைமையில் நடாத்துகின்றது.

இக் கருத்தரங்கில் புகைப்படங்கள், அட்டவணைகள் மாதிரிகள் ஆகியவற்றுடன் விளக்கங்களும் அளிக்கப்படும்.

பருத்தித்துறை மந்திகை அரசினர் வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் டாக்டர் எஸ். ஆனந்தராஜா மனிதனின் நீரிழிவு நோய் பற்றியும் கோப்பாய் அரச கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி எஸ். சுப்பிரமணியம் பசுக்களுக்கும் எருதுகளுக்கும் ஏற்படும நோய்கள் பற்றியும், அச்சுவேலி அரச கால்நடைப் பண்ணை முகாமையாளர் டாக்டர். திருமதி ரீ. தங்கராசா கோழிகளின் நோய்கள்பற்றியும் கருத்துரைகளை வழங்குவார்கள்.

## பொது நூலகம் அமையும்

(புலோலி)

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை குடத்தனை உப-அலுவலகப் பகுதி மக்களின் நன்மை கருதி சுமார் ஒரு இலட்சம் ரூபா செலவில் புதிய பொதுசன நூலகமொன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதுவரை காலமும் வசதியான பொதுசன நூலகமொன்றில்லாததால் இப் பகுதி மக்கள் பெரும் கஷ்டமனுவித்து வந்ததுடன் புதிய பொதுசன நூலகமொன்றை அமைத்துத் தருமாறும் கோரிக்கை விடுத்திருந்தனர். இதுவரை காலமும் இப் பொதுசன நூலகம் உப-அலுவலகத்தின் ஒரு பகுதியில் இயங்கி வந்தது.

தற்பொழுது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இப்பகுதியில் பொதுசன நூலகமொன்றை அமைப்பதற்கு ஒரு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக குடத்தனை உப-அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. ஆர். தர்மகுலசிங்கம் தெரிவித்தார்.

### சுதந்திரம் ...

-4ம் பக்கம் பார்க்க

கேட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளதே?

பதில்: எனக்கு யார் கைது செய்யப்பட்டார்களென்றும் தெரியாது; என்ன நடந்ததென்றும் தெரியாது. இம் முழுப் பொய்யை நான் வன்மையாக மறுக்கிறேன்.

கேள்வி: இன்றைய கால கட்டத்தில் தமிழ் பேசும் மக்களுக்கு நீங்கள் எதனைக் கூற விரும்புகிறீர்கள்?

பதில்: எமது வரலாற்றில் மிக மோசமான நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்த நேரத்திலாவது இயக்கங்கள் அனைத்தும் ஒற்றுமைப்பட்டு மக்களுடன் இணைந்து முன்வர வேண்டும். நாம் ஒற்றுமையாக செயற்பட்டு இந்தியாவின் பரிபூரண ஆதரவைப் பெறுவோம். சுதந்திரத்திற்கு பின் யார் நாட்டை ஆள்வது என எண்ணி எமக்குள் மோதிக் கொள்ளாமல் நடந்ததை மறந்து அனைவரும் ஒன்றுக செயற்பட மக்கள் தமது ஆதரவினை செலுத்த வேண்டும். இதைத்தான் நான் ஈழமுரசு மூலம் தெரிவிக்க விரும்புகிறேன்.

கேள்வி: நீங்கள் ஈழத்திற்கு செய்வது அண்மைக் காலங்களில் சாத்தியப்படுமா?

பதில்: இப்போது இல்லை. ஒரு புறம் சிங்களக் குண்டர்களில் வெறி பித்த இராணுவமும் என்னை அழிக்க முயற்சிக்கின்றது. அதே வேளை மறு புறத்தில் எம்மவரே எமக்கு குறி வைக்கின்றனர். ஆனுல் இவற்றிற்கு பயப்படுவதாக யாரும் நினைக்கத் தேவையில்லை. நான் இலங்கையில் இருந்திருந்தால் நினைத்தவுடன் இந்திய அரசிடம் தொடர்பு வைத்திருக்கவும் முடியாது. அடுத்தது இவ்வாறு நினைத்தவுடன் வேறு நாடுகளுக்கு செல்லவும் சந்தர்ப்பம் தரப்பட்டிருக்காது அதனுல் தான் நான் தொடர்ச்சியாக இந்தியாவிலிருந்து செயற்பட வேண்டியுள்ளது.

ஈழமுரசு

## பூஸாவில் இருந்த மூவர் கடற்படையிலிருந்து நீக்கம்

இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு பூஸாவில் தடுத்துவைக்கப்பட்டிருந்த மூன்று கடற்படைத்தளசிவில் ஊழியர்களுக்கு வேலைநீக்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. நாகராசா யோகராசா, பூபாலபிள்ளை வரதராசா, மரியதாஸ் ஆகிய இம்மூவரும் சுமார் பத்துவருடச் சேவையைக் கொண்டவர்கள். வேலைத்தளத்திற்கு சென்றுகொண்டிருக்கும்போது இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட இவர்கள் இரண்டு மாதங்கள் பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். பின்னர் மூன்றுமாதம் சொந்த மாவட்டத்திற்கு செல்லக்கூடாதென்ற நிபந்தனையின் பின் இவர்கள் விடுதலை செய்யப்பட்டிருந்தார்கள். நிபந்தனைகாலம் முடிந்ததின் பின் திருமலைக்கு திரும்பி கடற்படை தொழில்தளத்திற்கு சென்றசமயம் இவர்களுக்கு வேலைநீக்க கடிதங்கள் வழங்கப்பட்டனவாம். இதுகுறித்து இவர்கள் திருமலை பிரஜைகள் குழுவிற்கும், யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கும் புகார் செய்துள்ளனர்.

### இணுவிலிலிருந்து சுன்னாகத்துக்கு மாபெரும் ஊர்வலம்
### கொளுத்தும் வெய்யிலில் வான் பிளக்கும் கோஷம்

# ஆயுதப் போராட்டமே தீர்க்கமான முடிவு; பார்வையாளர்கள் பங்காளராக வேண்டும்!

## கூட்டத்தில் விடுக்கப்பட்ட வேண்டுகோள்

(ஏழாலை)

''பாதுகாப்பு வலயத்தை வாபஸ் பெறு''; ''உலக நாடுகளே எமது போராட்டத்தை ஆதரியுங்கள்'', ''இஸ்ரேலே பலஸ்தீன் மீதான ஆக்கிரமப்பை நிறுத்து''; ''முதலியாரே புலியன்வாலைக் கூட உம்மால் பிடிக்க முடியாது'' ''றீகன் பெரஸ் வழியில்...;'' ''விடிவு காணும் வரை போராளிகளே போராடுங்கள்'' சுன்னாகத்தில் நடந்த குண்டுத் தாக்குதலை இனி அனுமதியோம்'; என்பன போன்ற சுலோகங்களைத் தாங்கி, ''றேகன் ஒழிக'' ''பாதுகாப்பு வலயத்தை அகற்று'' மொசாட்டை ஒழிப்போம் ''மக்கள் சக்தி மாபெரும் சக்தி'' ''இராணுவமே வெளியேறு'' என்ற கோஷங்களுடன் நேற்று காலை 9 மணிக்கு இணுவில் பரராசசேகர பிள்ளையார் கோவிலடியில் ஆரம்பமான ஆர்ப்பாட்ட ஊர்வலம் நண்பகல் 12 மணிக்கு சந்தை மைதானத்தை வந்தடைந்தது.

பல்லாயிரக் கணக்கான மக்கள் பங்குபற்றிய ஊர்வலத்தில் பெண்கள் அதிக அளவில் காணப்பட்டனர், ஊர்வலத்தில் ஜே. ஆர்., றேகன், லலித், அத்துலத் முதலி ஆகியோரின் உருவங்கள் முன்னெடுத்துச் சென்றது குறிப்பிடத்தக்கது.

மைதானத்தில் வெய்யிலில் குந்தியிருந்த மக்கள் ஒரே குரலில் ''எமது தாயகம் தமிழ் ஈழத் தாயகம்'' ''இராணுவமே வெளியேறு இல்லையேல் வெளியேற்றுவோம்'' ''போராளிகளே போராடுங்கள்'' என்ற வசனங்களை வான் அதிர எழுப்பினர்.

கூட்ட முக்கியஸ்தர் உரையாற்றும்போது, ''தை மாத-இக் கொடிய வெய்யிலிலிருந்து பேச வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தமிழினம் தள்ளப்பட்டிருக்கிறது

வருங்கால வாழ்வை வளமாக்கி முன்னெடுத்துச் செல்லும் போராட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கும் பெருமை பெற்ற மாதர் குலம் நிறைந்திருப்பதால் பெருமை அடைகின்றோம். ஆண்கள் வாலைச் சுருட்டி ஒதுங்கும் வழக்கம் பாரம்பரியமாய் இருந்து வருகின்றது. இந்நிலை மாற வேண்டும். போராடும் இளைஞர்களுக்கு முட்டுக்கட்டையாய் பார்வையாளராய் களத்தேயலைந்து உயிரை இழக்கவும் ஊனமடையவும் வழி வகுக்க கூடாது,; என்றார்.

ஆயுதப் போராட்டமென்ற தீர்க்கமான முடிவுக்கு வந்து விட்டோம். அமெரிக்கா உலக அழிவுக்கு வித்திட்டுள்ளது. இஸ்ரேலியர் மூலம் ஆயுதமும் ஆட்பலமும் அளிக்கப்படுகிறது. தென்கொரியாவும் உதவுகிறது. கெலிகொப்டர் இறக்க முடியாத காரணத்தால் ஏவுகணைத் தாக்குதல் நடத்துகிறது உயிர் பறிப்பு, கற்பழிப்பு முதலியனவற்றில் விழிப்பாயிருக்க வேண்டும். இனத்தை அழிக்க மொழியை அழி என்ற செயற்பாடும் நடந்துள்ளது. ஆகவே எல்லாவற்றையும் வென்றெடுக்க போராளிகளுக்கு உதவுவோம். இயக்கங்கள் ஒன்று சேர்ந்தே இலட்சியத்தை அடைய முடியும என்றும் அவர் தெரிவித்தார்.

கூட்டத்தின் முடிவில் கூடியிருந்தோர் குளறியழ முன்னெடுத்து வரப்பட்ட உருவங்கள் தீயுடன் சங்கமமாயின.

### தமிழறிஞர் காலமானார்

ஈழத்தின் சிறந்த கல்விமான்களில் ஒருவரான அறிஞர் ச. அம்பிகைபாகன் நேற்று முன் தினம் காலமானார். இவர்வைத் தீஸ்வரா கல்லூரியின் அதிபராகப் பணி புரிந்தவர்.

### ஆறுவது அரசியல்....

திருப்பதும் ஒன்று தான்; நீக்குவதும் ஒன்று தான்; பாராளுமன்ற ஆசனத்தால் தமிழர் பிரச்சினை தீரப்போவதில்லை'' என்றார்.

### ஆசிரியர்களுக்கு ...

யாழ் கல்விப்பணிமனையின் முன்னால் இடம்பெறும் சத்தியாக்கிரமே இதற்குக் காரணமாம். இதே வேளையில் ஏனைய பகுதி ஆசிரியர்களுக்கு இம் மாதம் 20ம் திகதியே சம்பளத்திற்கான காசோலைகள் வழங்கப்பட்டுவிட்டன. புங்குடுதீவுப் பாடசாலைகளுக்கு உரிய காசோலைகள் 20ம் திகதி வழங்கப்படாமையால் ஆசிரியர்கள் பெரும் அதிருப்தியடைந்துள்ளனர்.

### இரு துவக்குகள்....

ருந்த இருவரது துப்பாக்கிகளும் இனந்தெரியாத இரண்டு இளைஞர்களால் பறித்துச் செல்லப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

றிவோல்வர், கைக்குண்டு சகிதம் வந்த இனந்தெரியாத இளைஞர்கள் பாதுகாப்பு ஊழியரை ஓர் அறையுள் கூட்டிச் சென்று மிரட்டியே இதனைச் செய்துள்ளனராம். இதனால் நேற்றைய தினம் பாதுகாப்புக்கு வேண்டிய துப்பாக்கிகளில்லாமையால் மக்கள்வங்கி திறக்கப்படவில்லை. இது பொது மக்களையும் வர்த்தகர்களையும் பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது.

### மூன்று முகமூடி ...

ளங்காணக் கூட்டிச் செல்லப்பட்டனர். வணக்கத்துக்குரிய பிதா ஒருவர் இறங்காமல் இருந்த சமயம், அவர் இராணுவத்தினரால் வலுக்கட்டாயமாக, இறக்கப்பட்டார். இதனை அவதானித்த இராணுவ மேலதிகாரி மன்னிப்புக் கோரிப் பிதாவை பஸ்ஸில் ஏறி இருக்க அனுமதித்தார்.

முகமூடி மனிதனின் அடையாளம் காட்டுதலால் சிலர் கைது செய்யப்பட்டிருக்கலாமென்றும், கூறப்படுகிறது. வாகன ரோந்து சேவை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் காணப்படுகிறது.

### யாழ். அரசாங்க ...

சுண்டிக்குளி கிளையால் நடாத்தப்பட்ட நேற்றைய மறியலில் முன்னணிப் பிரதிநிதிகளுடன் தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டி பிரதிநிதிகள், வேம்படி மகளிர் கல்லூரி உயர் வகுப்பு மாணவிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ஜனாதிபதியை...

தூதுவர் கேட்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்

இச் சம்பவங்களில் ஒன்றுமறியாத அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

தூதுவர்டிக்ஸிற் அனேகமாக இன்று ஜனாதிபதியைச் சந்திக்கக் கூடுமென்று கொழும்பிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

#### சித்த மருத்துவத்துறை

### ஆண்டு விழாவும் மலர் வெளியீடும்

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை முதலாவது ஆண்டுவிழாவும் மலர் வெளியீடும் கைதடியிலுள்ள சித்த மருத்துவத்துறை அரங்கில் இன்று காலை ஒன்பது மணிக்கு நடைபெறும்.

மூலிகை மரம் நாட்டு வைபவம், கவியரங்கு, கருத்தரங்கு ஆகியனவும் இங்கு நடைபெறும். பல்துறை அறிஞர்களும் இவ்வைபவங்களில் பங்குபற்றுவர்.

### மலையகத்தில்....

ஜெயவர்த்தனவுடனும், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஹெரத்துடனும் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கி, உடன் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

### கிளிநொச்சியில்...

சிலர் கைது செய்யப்பட்ட போதிலும் அன்றிரவு அனைவரும் விடுவிக்கப்பட்டதாக தெரிய வருகிறது.

இதேவேளை கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி ரயில் நிலையத்தில் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பெண்ணினதும், குழந்தையினதும் சடலங்கள் முரசுமோட்டையைச் சேர்ந்த தவராசா சின்னமணி (40) அவரது மகள் சுகந்தி (12) என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பழைய பஸ் நிலையத்தருகில் மரக்கறி வியாபாரம் செய்தவரின் மரக்கறிகள் இராணுவத்தினரால் பறிமுதல் செய்யப்பட்டது.

நேற்றுக் காலை இரண்டு கவச வாகனங்களிலும், ஜீப்பிலும் இப்பகுதிக்குவந்த இராணுவத்தினரால் அங்கு வியாபாரம்செய்து கொண்டிருந்தவரின் சுமார் மூவாயிரம் ரூபா பெறுமதியான மரக்கறி வகைகள், வெங்காயம், மிளகாய் போன்ற பொருட்கள் அவ்வழியில் வந்தவர்களுக்கு அள்ளிக் கொடுக்கப்பட்டது. இவ்வியாபாரியின் மகன் ஒருவரும் தாக்கப்பட்டார்.

### யாழ்மாவட்ட ...

காலை 8-45 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்திலிருந்து ஆரம்பமாகும் இவ் ஊர்வலம் வடபிரதேச தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழு நடத்தும் ஊர்வலத்துடன் இணைந்து யாழ். செயலகம் நோக்கிச் செல்லும்.

### கேந்திரப் பகுதி....

கள் உட்பட்டுள்ளதால் பத்தாயிரத்துக்கும் அதிகமான மாணவர்களினதும், அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களினதும் நிலையையிட்டு அதிபர் சங்கம் கவலை கொண்டுள்ளது. இப் பாடசாலைகளை வேறு இடங்களுக்கு கொண்டுசெல்லுதல் இயலாத காரியமாகும். இதனால் பாதுகாப்பு வலயத்தினுள் இவற்றைக் கொண்டு வருவதனைக் கைவிட வேண்டுமெனக் கோரும் தீர்மானம் வடமாகாண அதிபர் சங்கத்தின் நிர்வாகசபை, அதன் தலைவரும் சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரியின் அதிபருமான திரு க. அருணசலம் தலைமையில் வேம்படி மகளிர் கல்லூரியில் கூடியபோது நிறைவேற்றியது.


## மரண அறிவித்தல்

### டாக்டர் திரு பேர்ள் அரியமலர் யோகராஜா

அன்னார் திரு. சு. யோகராஜா (சட்டத்தரணி) அவர்களின் அன்பு மனைவியும், ஜயந்தா (பொறியியலாளர்), அஜித்குமார் (பொறியியலாளர்) மதுராமாலதி (பட்டதாரி மாணவி-சென்னை கிறிஸ்தவக் கல்லூரி) ஆகியோரின் அருமைத் தாயாரும், லலிதா, லலிதாம்பிகை ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். ஈமக்கிரியைகள் 29-1-86 புதன்கிழமை பி.ப. 2.30 மணிக்கு அன்னாரின் சண்டிலிப்பாய் இல்லத்தில் நடைபெறும். R/16392

## மரண அறிவித்தல

### பாலசுப்பிரமணியம் ரவீந்திரநாத்

வளாக ஒழுங்கை திருநெல்வேலியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் ரவீந்திரநாத் (ரவி) 23-1-1986 இல் ஜெர்மனியில் காலமானார். இவர் பாலசுப்பிரமணியம் சரஸ்வதி ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும், மகாதேவி, ரகுநாதன், வசந்தன், காலம்சென்ற சிறுதரன், மகேஸ்வரன், மனோகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சோபனின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 28-1-86 இல் ஜெர்மனியில் நடைபெறும்.

B/1038 பெற்றோர், உறவினர்கள்.

## மரண அறிவித்தல்

### க. இராசதுரை

யாழ்ப்பாணம் பிள்ளையார் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் திரு. க. இராசதுரை அவர்கள் காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியை பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். B/1036


''ஈழமுரசு'' சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 28 - 01 - 86 செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி 23336